**செய்தி வெளியீடு எண்: 080** **நாள்: 31.01.2018**

**செய்தி வெளியீடு**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் தமிழகத்தில் இயங்கி வரும் அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கான அகில இந்திய தொழிற்தேர்வுகளின் எழுத்துத் தேர்வுகள் 5.2.2018 முதல் தொடங்கி நடைபெறவுள்ளது.

இத்தேர்வுகளில் தமிழகம் முழுவதும் உள்ள 100 தேர்வு மையங்களில் சுமார் ஒரு இலட்சம் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வுகளை கண்காணிக்க மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், மாநகர காவல்துறை ஆணையர்களின் உதவியோடு சிறப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புகார்களுக்கு இடமின்றி இத்தேர்வுகள் நடைபெற ஏதுவாக தேர்வு மைய தலைவர்களை இடம் மாற்றி பணிபுரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அகில இந்திய தொழிற்தேர்வுகளில் இதுவரை தவறான விடைகளுக்கு எதிர்மறை மதிப்பெண்கள் (Negative Marks) வழங்கப்பட்டு வந்தன.

புதுடெல்லி, பயிற்சித் துறை தலைமை இயக்ககத்தில் 30.11.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில், மாநில பயிற்சித்துறை இயக்குநர்களால் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இத்தேர்வுகளில் இதுவரை வழங்கப்பட்டு வந்த எதிர்மறை மதிப்பெண்கள் (Negative Marks) நீக்கப்படுவதாக முடிவு செய்யப்பட்டு 30.01.2018 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**